முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1178

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

20.12.2022, செவ்வாய்கிழமை

1. ஞானவான்கள் எனும் மகா சக்திதனை
ஞாலமதில் எங்கும் உருவாக்கி இனிதே
தானதர்மத்தை உலகமெல்லாம் பரப்பி
தர்மஞானலோகமாக உலகையே மாற்றி
2. மாற்றியே அற்புதம் நிகழ்த்த
மாதவசியாய் வந்த குருராஜனே
ஆற்றல்பட உந்தனுக்கு சுப்ரமணியர்யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 05 ம் நாள் 20.12.2022, செவ்வாய்கிழமை)
3. ஆசியதும் அரங்கனால் இந்த கலியுகம்
அற்புதம் பெற்று ஞானயுகமாகும்
வாசிவென்ற சக்திமிகு ஞானிகள் கூட
வலம்வந்து அரங்கனோடு கலந்து இனிதே
4. இனிதே அரங்கன் நடத்தும் இந்த அறம் வேள்வி தனை
ஏற்று மகா துணையாக அற்புதம் நடத்த
ஆற்றல்பட உலகோரெல்லாம் ஞானம் பெற
அதிசயம் கலியினில் நடந்தேறும்
5. நடந்தேறும் இந்த உயர்ஞான வேள்வியை
ஞானபண்டிதன் யான் அரங்கனோடு இருந்து
தடையின்றி நித்தம்நித்தம் சக்திகூட்டி வளர்த்துவர
தரணியோர் இந்த அற்புதமான ஞான வேள்விக்குள்ளாக
6. இணைந்து கலந்து உலகத்தின் தொண்டர்களாக
அறத்தின்பால் கொண்டுள்ள பங்களிப்பாக
ஆகவே சரணாகதி கொண்டுவிட
அனைவருக்கும் அழியாமை என்கின்ற மகாசக்தி
7. வரமாக அரங்கன் வழி
எந்தன் அனுகூலமாக ஆசியாக
வந்து வையகத்தில் வளர்ச்சி மாற்றம்
அவரவர்க்குள்ளும் ஞானமாக தேறி
8. தேறியே உலகோர் அரங்கன் தேடலில்
தெய்வநெறி கொண்ட ஞானிகளாக
மாறுதல் பெற்று உலகமாற்றம் செய்வர்
மக்களெல்லாம் ஞானிகளாக திளைப்பர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–